# பத்திரிக்கைச் செய்தி

கோவை மாவட்டம், பாப்பநாயக்கன்பாளையம், அசோகர் வீதியைச் சேர்ந்த ராமசாமி நாயுடு மகன் முரளிதரன் என்பவர் ஸ்கிராப் புரோக்கரேஜ் தொழில் செய்து வந்துள்ளார். முரளிதரன் என்பவர் அவரது நண்பரான ராஜேஷ்குமாருடன் TN 38 AT 2820 என்ற ஸ்பிலண்டர் NXG வாகனத்தில் 04.11.2008ம் தேதி ஒருவருடைய வீட்டை பார்த்துவிட்டு அன்று மாலை 5.30 மணியளவில் இருவரும் கவுண்டம்பாளையம் சிக்னல் அருகே வந்தபோது பெரியநாயக்கன்பாளையம் ஹைவே பெட்ரோல் பெண் உதவி ஆய்வாளரும் ஒரு பெண் காவலரும், டிரைவரும் டாடா சுமோ போலீஸ் வண்டியுடன் நின்று கொண்டு அவர்கள் வந்த வண்டியை நிறுத்தியுள்ளனர். உதவி ஆய்வாளர் முரளிதரனிடம் மது அருந்தியுள்ளீர்களா என கேட்டுள்ளார். அவர் தான் மது அருந்தவில்லை, தனது நண்பர் மது அருந்தியுள்ளதாக கூறியுள்ளார். பின்னர் அவரிடம் பெயர் விலாசத்தை கேட்டு எழுதி கையொப்பம் வாங்கிக் கொண்டு நோட்டீசை கொடுத்துவிட்டு துடியலூர் காவல்நிலையத்திற்கு வருமாறு கூறிவிட்டு சென்றுள்ளார். முரளிதரனும் தனது நண்பர் ராஜேஸ்குமாருடன் அன்று இரவு சுமார் 7 மணியளவில் துடியலூர் காவல் நிலையம் சென்றுள்ளார். சிறிது நேரத்தில் அங்கு வந்த உதவி ஆய்வாளரும், ஒரு பெண் காவலரும் பணியில் இருந்த தலைமைக் காவலர் 262விடம் நோட்டிசையும் வண்டி சாவியையும் கொடுத்துவிட்டு ஒரு கேசு பார்த்துக் கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டு சென்றுள்ளனர். தலைமைக்காவலர் 262விடம் முரளிதரன் தனது வண்டியை கேட்டபோது நாளை வரும்படி சொல்லி அனுப்பியுள்ளார். அதன்படி மறுநாள் சென்ற முரளிதரனிடம் தலைமைக் காவலர் 262 தனக்கு ரூ.4,600/- கொடுத்தால் தான் வண்டியை தருவேன். நான் கேசை பார்த்துக் கொள்கிறேன், இல்லைனா ரிமாண்ட் பண்ணிவிடுவேன் என சொல்லி பணத்தை ரெடி பண்ணிவிட்டு வா என சொல்லி அனுப்பியுள்ளார். அதன் பிறகு முரளிதரன் மீண்டும் 07.11.2008ம் தேதி மதியம் 12 மணியளவில் தனது நண்பர் கார்த்திகேயனுடன் துடியலூர் காவல் நிலையம் சென்று தலைமைக் காவலர் 262விடம் தனது வண்டியை கேட்டுள்ளார். அதற்கு தலைமைக்காவலர் 262 தான் கேட்ட பணம் ரூ.4,600/- என்னாச்சு என்று கேட்டதற்கு முரளிதரன் தன்னிடம் அவ்வளவு பணம் இல்லை என்று கூற இறுதியாக ரூ.4,000/- கொடுத்தால் தான் வண்டியை தருவேன் என கூறியுள்ளார்.

முரளிதரனுக்கு லஞ்சம் கொடுக்க விருப்பம் இல்லாததால் கோவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் புகார் கொடுத்துள்ளார். மேற்படி புகாரின் பேரில் தலைமைக்காவலர் 262 மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து பொறி வைத்து பிடிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதன் தொடர்ச்சியாக 07.11.2008ம் தேதி இரவு துடியலூர் காவல் நிலையத்தில் வைத்து தலைமைக்காவலர் 262 திரு.ரவிச்சந்திரன் ரூ.4,000/-ஐ முரளிதரனிடம் இருந்து லஞ்சமாக கேட்டு பெற்றபோது, சூகாவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவினரால் கையும் களவுமாக கைது செய்யப்பட்டார். கோவை ஊழல் தடுப்பிற்கான சிறப்பு நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்று வந்த வழக்கில், ஏதிரி ரவிச்சந்திரன் என்பவருக்கு ஊழல் தடுப்பு சட்டம் 1988 பிரிவு 7ன் கீழ் 1 வருடம் கடுங்காவல் சிறை தண்டணையும் ரூ.5,000/- அபராதமும், ஊழல் தடுப்பு சட்டம் 1988 பிரிவு 13(2) r/w 13(1) (d) கீழ் 1 வருடம் கடுங்காவல் சிறை தண்டணையும் ரூ.5,000/- அபராதமும் விதித்து தீர்ப்பு அளிக்கப்பட்டது.